

**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**

# ஆனந்தக் கூத்தரின் அற்புத ரகசியங்கள்

உலகில் மிகவும் ப்ரபலமான கலைப் படைப்புகளில் ஒன்று நம் தமிழ் நாட்டில் விளங்கி வரும் சிவபெருமானின் நடராஜ வடிவம் ஆகும். பல ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள எண்ணற்ற நடராஜ வடிவங்கள் நாடெங்கும் உலகெங்கும் வழிபாட்டிற்கும் அலங்காரத்திற்கும் என வடிவமைக்கப் படுகின்றன. மிக உயர்ந்த வழிபாட்டு ஸ்தலங்கள் முதல் உயர்தர உணவு விடுதிகள், செல்வர்கள் மாளிகைகள், அருங்காட்சி அகங்கள் எனப் பல இடங்களில் நடராஜ மூர்த்தியைக் காணமுடியும்.

தமிழகத்தில் ஆகம விதிப்படி அமைந்த எந்த ஒரு சிவன் கோயிலிலும் நடராஜர் முக்கிய இடம் வகிக்கின்றார்.

மனிதனின் உன்னத படைப்புக்களில் இவ்வுருவம் அவனது அறிவின் முதிர்ச்சியையும் பக்குவத்தையும் பரிணாமத்தையும் காட்டும் ஓர் அரிய சின்னம் எனலாம்.

தன்னுள்ளும் தன்னைச் சுற்றி இயங்கும் பூமியிலும் ப்ரபஞ்சத்திலும் உள்ள ஓர் விஞ்ஞான-மெய்ஞான தத்துவத்தை மனிதன் உணர்கிறான். அதை மதிக்கிறான், அதை அனைவருடனும் பகிர்ந்து கொண்டு களிக்க நினைக்கிறான். புரியாததைப் புரிந்து கொள்ளும் வகையில் கலைகள் மூலம் புரியச் செய்கிறான். அவ்வாறு

மனிதன் தான் உணர்ந்த உயர்ந்த ப்ரபஞ்ச தத்துவத்தை உலகிற்கு மிக எளிய உருவகக் குறியீடுகள் மூலம் உணர்த்தும் ஓர் படைப்பே நடராஜ வடிவம் ஆகும்.

பதினாறாம் நூற்றாண்டு வரை பாரத தேசத்தில் சிற்பங்களை வெறும் இக்காலக் கார்ட்டூன் போல நினைத்து வந்தது உலகம். சில அந்நிய அறிஞர்கள் மூலம் தான் அவற்றுள் பொதிந்துள்ள ஆழ்ந்த தத்துவங்களை உலகம் புரிந்து கொள்ள ஆரம்பித்தது. அதில் மிக அதிசயிக்கத் தக்க ஒன்று தான் நடராஜ உருவ தத்துவம் ஆகும்.

நடராஜ வடிவத்தையும் நடனக்கலையையும் மிக நுட்பமாக ஒப்பிட்டு ஆராய்ச்சிகள் பல காலத்திலும் பல அறிஞர்களாலும் மேற்கொள்ளப் பட்டு இருக்கின்றன.இப்பகுதியில் நடராஜ தத்துவத்தின் குறியீட்டு விளக்கங்களை சைவ ஆகம விதிப்படி உணர முயற்சிக்கிறோம்!

நடராஜ வடிவங்கள் பாரத நாட்டின் நடன சாஸ்த்ர விதிப்படி நூற்றியெட்டாகவும் வடிக்கப் பட்டு வழிபடவும் செய்யப்படுகின்றன.

நாடெங்கும் பொதுவாகக் காணப் படும் நடராஜ வடிவத்தை decode செய்வோம்.

***முதலில் ஏன் இறைவனை ஆடும் கோலத்தில் நம் முன்னோர் உருவகம் செய்தனர்?***
***ஆட்டம் எப்போது வரும்?***
***ஆனந்தக்களிபால் ஆட்டம் வரும்.***
***யாருக்கு ஆட்டம் வரும்?***
***ஒரு செயலை வெற்றிகரமாகச் செய்தாலோ, ஒன்றை உள்ளது உள்ளபடி உணர்ந்து அறிவால் தெளிந்தாலோ அச்சந்தோஷ மிகுதியால் உடலும் மனமும் ஆடும்.***
***ப்ரபஞ்சத்தின் மூலமான ப்ரஹ்மத்தை, அதன் தத்துவத்தை உள்ளது உள்ளபடி அறிந்து கொண்ட ஜீவனின் ஆனந்த பரவச நிலையே ஆனந்தக்கூத்து என உருவகம் செய்யப்படுகின்றது.***
***ப்ரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு அணுவும், அதன் இயக்கமும் ப்ரஹ்மத்தின் இயக்கத்தால் செயலில் இருக்கும் இயக்கத் தன்மையே இக்கூத்து எனலாம்.***

<u>**சிதம்பரம் என்னும் தலைமைச்செயலகம்:**</u>
நடராஜருக்கு என ப்ரத்யேகமான ஸ்தலம் கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரம்.சிதம்பரத்தையே ”தில்லை” என்றும் ”பெரும்பற்றப்புலியூர்” என்றும்

கூறுவது வழக்கம். இதுவே சைவ சமயத்தின் தலைமைச் செயலகம் ஆகும். காலம் காலமாக "தில்லை வாழ் அந்தணர்கள்" எனப்படும் தீக்ஷிதர்கள் மூலம் பூஜிக்கப் பட்டு வரும் சுத்த பொன்னால் ஆன நடராஜர் சிதம்பரத்தில் மூலஸ்தானத்தில் இருக்கிறார்.

சிதம்பரம் பஞ்சபூத ஸ்தலங்களில் ஆகாச ஸ்தலம் ஆகும். இக்கோயிலில் இறை தத்துவத்தை நான்கு நிலைகளில் வழிபடுவர்.
* ***உருவம் - சாதாரண மக்களுக்கு இறையாண்மையை உணர்த்த ஏற்படுத்தப் பட்டது - நடராஜர்.***

* ***அருவுருவம் - ஸ்படிக லிங்கம் [ஸ்ரீஆதிசங்கரரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது]***

* ***எந்த்ரம் - சிதம்பர சக்ரம்.***

* ***உருவமே இல்லாத தத்துவ ஞான நிலை - அகண்ட வெளி ஆகாசமாக இறைவனை பூஜித்தல்.***

மிக உயர்ந்த மெய்யறிவைப் பெற்ற ஞானி முதல் கடை நிலை மனிதன் வரை இறை தத்துவத்தை எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் சிதம்பரம் கோயில் வடிவமைக்கப் பட்டு இருக்கின்றது. அக்கோயிலில் நிகழும் பூஜைகளும், நடராஜ தத்துவமும் வேத ஆகமத்தில் கூறப்படும் வாழ்க்கைத் தத்துவத்தை முழுமையாக ஒரு ஆசிரியர் மாணவனுக்கு எடுத்து விளக்கும் படியாக மிக எளிமையாகக் காட்டப்படுகின்றது. ஆனால் காலத்தின் போக்கில் அவை மறக்கப் பட்டுவிட்டன. ஓரளவுக்கு அதை மீண்டும் எடுத்து விளக்க முற்படுவோம்.

அதனால் தான் சிதம்பரம் கோயில் "சைவத்தின் தலைமைப்பீடம்" எனப்பட்டது.இதன் நுட்பத்தை உணர்ந்து அதை வாழ்க்கையில் தன்னுள் இணைத்துக் கொண்டு ஆன்மீகப்பாதையில் மேற்செல்ல முயற்சிக்க வேண்டும்.

**சிதம்பரக் கோயில் ஒரு எளிய விளக்கம்:**
சிதம்பரத்தில் கனக சபையில் நடராஜர் இருக்கிறார்.
கனகம் - தங்கம். பூரண மெய்யுணர்வின் [consciousness] உருவகம் தங்கம் ஆகும்.

தங்கத்தைப் போல் கிடைப்பதற்கு மிக அற்புதமான அரிதான அருமையான மனித உடலுக்குள் மனதுக்குள் அறிவுக்குள் விழிப்புணர்வுக்குள் மெய்யுணர்வாகி சதா இயங்கும் ப்ரஹ்ம தத்வமே ஆனந்த கூத்தனின் சிற்பம் ஆகும்.

ஒன்பது ஓட்டைகள் கொண்ட மனித உடல் - கனக சபைக்கூரையின் ஒன்பது கலசங்கள்.

மனிதன் ஒரு நாளுக்கு 24000 முறை சுவாசிக்கும் கணக்கைக் குறிக்கும் வகையில் 24000 பொன் ஓடுகள்.

சுவாசம் என்பது ஏதோ உடலை வளர்த்து வெறும் சிற்றின்ப வாழ்க்கைக்கு அல்ல, பேரின்பமாகிய ப்ரஹ்மத்தை உணர்வதற்கே என்ற மிக்க விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதை உணர்த்துவதே பொன் ஓடுகளின் பின்பக்கம் உள்ள ”சிவாயநம” என்னும் பஞ்சாட்சரம் ஆகும்.

பஞ்சபூதங்களால் ஆன உடலும் உடல்-மனம்-அறிவு-விழிப்புணர்வு-மெய்யுணர்வாகிய நிலைகளில் ஒன்றுபட்டு ப்ரஹ்மத்தை உணர வேண்டும் என்று இம்மஹாமந்த்ரம் உணர்த்தும்.

மனித உடலில் உள்ள 72000 நாடிகளை, பொன் ஓடுகளை இணைக்கும் 72000 பொன் ஆணிகள் குறிக்கும்.

கனக சபையின் ஒரு பாகமாக இருக்கும் **சித்சபை - ஞானம்** என்ற வெளியில் இறைவன் இருக்கிறான். அதாவது மனித உடல் எடுத்ததன் பயனே ஆன்மீகம் மூலம் ஞானத்தால் தான் யார் என்ற தன்மையை ஒவ்வொருவனும் உணர வேண்டும் என்ற தத்துவத்தை இச்சபை உணர்த்தும்.

ப்ரஹ்ம தத்துவத்தை உணர்ந்து உலகிற்கு சேவை செய்யும் ஜீவனே **தில்லை வாழ் அந்தணன்**. சதா பூரண மெய்யுணர்வில் தானும் ப்ரஹ்மமும் வேறு அல்ல என்ற லயத்தில் இருக்கும் ஆன்மாவே சதா ஆனந்தக்கூத்தாகிய இறைமையைத் தன்னுள் உணர முடியும் என்பதையே தீக்ஷிதர்கள் உணர்த்துவர்.இதைச் சாதி அமைப்பில் காணக்கூடாது!

மனமாகிய பிரம்மாவும் அறிவாகிய விஷ்ணுவும் விழிப்புணர்வாகிய சிவனுடன் இணைந்தே இருப்பர் என்பதை உணர்த்துவதற்கே, தில்லை கோவிந்தராஜரும், சண்டிகேஸ்வரர் அருகில் உள்ள பிரம்மாவும் இருக்கிறார்கள். இது உலகில் வேறு எங்கும் காணமுடியாத அமைப்பும் ஆகும்.

இப்போது புரிகிறதா ஏன் இத்தலத்தை சைவ சமயத்தின் தலைமைப்பீடம்



எனக்கொண்டனர் என்று?

<u>**நடராஜரின் அழகிய கோலம்:**</u>

<u>**ப்ரபஞ்ச இயக்கமே நடனம் ஆகும். அந்த நடனத்துக்குக் காரணம் ப்ரஹ்மம். அப்ரஹ்மமே சைவத்தில் சிவனாக உருவகம் பெற்றது. அக்காரணப் பொருளே இங்கு நடராஜர் ஆகும்.**</u>

அணுவின் இயக்கமும்,பஞ்சபூத இயக்கமும்,அப்பூதங்களின் கூட்டால் ஆன உடல்களின் இயக்கமும் நடனம் ஆகும்.

* அழகிய தாமரை இதழ்கள் கொண்ட ”பத்மபீடம்”.

* அதன் மீது குப்புறக்கிடக்கும் குறள் பூதம். இவனுக்கு ”முயலகன்” என்று பெயர். அவன் கையில் வாள் வைத்து இருப்பான். அவனருகில் நாகப் பாம்பு நெளியும்.

* அப்பீடத்தை ஒட்டிய பெரிய நீள்வட்ட அல்லது வட்டமான ப்ரபைச்சுற்று. அதில் வரிசையாகத் தீச்சுடர்கள்.

* முயலகனின் நடுமுதுகின் மீது தன் வலது காலை ஊன்றி அழுத்தி ஈசன் நிற்கிறார்.

* ஈசனின் இடது கால் வலது பக்கமாக தூக்கிச் சற்று வளைத்த பாதத்துடன் விளங்கும்.

* ஈசனின் கீழ் வலது கை - ”அஞ்ச வேண்டாம்!” என்று உணர்த்தும் ”அபயக்கரம்” ஆக இருக்கும்.

* ஈசனின் கீழ் இடது கை வலது பக்கமாக வீசிய படி தூக்கிய பாதத்தைச் சுட்டும் பாவனையில் இருக்கும். இந்த பாவனைக்கு ”கஜ ஹஸ்தம்” என்று பெயர்.

[ஹஸ்தம் - கை]

* ஈசனின் மேல் வலக்கை அழகிய உடுக்கையை அடிக்கும் பாவனையில் இருக்கும்.

* ஈசனின் மேல் இடக்கை தீச்சுடர்களை ஏந்தி இருக்கும்.

* அழகிய புன்சிரிப்புடன் கூடிய முகம், நீண்ட கண்கள்.

* இடையில் ஓர் ஆடை பறக்கும் பாவனையில் இருக்கும்.

* தலையில் சடை வாரிப்பின்னப்பட்டோ, விரிக்கப்பட்டோ, பின்புறம் வழிந்தோ, கொண்டையாக முடியப்பட்டோ இருக்கும்.

* தலையில் கபாலம், கங்கை, பூக்கள், பாம்பு, கொக்கின் இறகு, பிறை நிலா, காட்டுப்பன்றியின் கொம்பு, நட்சத்திரம், வெண்டலை மாலை, கொன்றை மாலை என அலங்கார வகைகள் இருக்கும். உருவத்துக்கு உருவம் சிற்பியின் கற்பனைக்கு ஏற்ப இவை மாறும்.

* காதுகளில் வலது புறம் வெற்றுக்காதாகவும், இடது காதில் சங்குத்தோடு, ஓலை, பூத்தோடு, நாகம் என ஏதாவது ஒன்றை அணிந்திருக்கும் பாவனை காட்டப்படும். இரு காதுகளிலும் குண்டலங்கள் இருக்கவும் செய்யும்.

* உடலில் பூணூல், சில நகைகள், நாகப்பாம்புகள் என அலங்காரம் இருக்கும்.

* தொடையுடன் கூடிய கச்சை வேட்டியும், மான் அல்லது புலித்தோல் ஆடையும் காட்டப்படும்.

* பீடத்தின் பக்கங்களில் குறள் பூதங்கள் நடனத்தை ரசிப்பது போலவும், இசைக்கருவிகள் வாசிப்பது போலவும் இருக்கலாம்.

* ஈசனின் இடது பக்கம் பார்வதி "சிவ ஆகம சுந்தரி" யாக [சிவகாமி] நிற்பாள்.

* சிதம்பரம் தவிர்த்த மற்ற ஸ்தலங்களில் ஈசனின் வலது பக்கத்தில் மாணிக்கவாசகர் இருப்பார்.திருவாலங்காட்டில் காரைக்கால் அம்மையார் இருக்கிறார்.



* கைகளின் எண்ணிக்கை, ஆடும் தோற்றம், கால்களின் தூக்கு முறை ஆகியன பல இடங்களில் பல தத்துவங்களை உணர்த்த மாறும். அவை பின் பார்க்கப் படும்.

* சிதம்பர ஸ்தலத்தில் உள்ள ஸ்ரீஆனந்த நடராஜ மூர்த்தியின் அமைப்பு மேற்கூறிய வகையில் உள்ளது. அதை அடிப்படையாகக் கொண்டே சோழர் காலத்தில் பல வடிவங்கள் கல்லிலும் செம்பிலும் ஐம்பொன்னிலும் விதவிதமான பாவனைகளுடம் வடிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் இன்று பல கோயில்களில் அத்திருமேனிகள் பராமரிப்பு அற்று, ஏனோ தானோ என வெறும் வழிபாட்டுப் பொருளாகி விட்டன. அதன் அழகையும் ஆழமான தத்துவத்தையும் அறியவும் ஆசையில்லை, அறிவிக்கவும் இஷ்டம் இல்லை!

நடராஜருக்குத் தமிழில் ஆடல்வல்லான், கூத்தபிரான், கூத்தன் என்று பெயர்கள் உள்ளன.இனி நடராஜர் திருமேனியில் இருக்கும் நுட்பமான தத்துவ ரஹஸ்யங்களை decode செய்வோம்.

* **<u>பத்மபீடம்:</u>**

தாமரை இதழ்கள் கொண்ட பத்ம பீடம் - நம் ஹ்ருதய கமலத்தைக் குறிக்கும். யோகத்தில் ஆறாவது சக்ரம் கபால உச்சியில் உள்ள சஹஸ்ரதள சக்ரம். இவ்விடத்தில் ஆனந்தமயமாக ப்ரஹ்மத்தில் நாமும் ஒன்றாக ஐக்யம் ஆகி அத்வைத்த பரமானந்தத்தை அனுபவிக்க முடியும் என்று யோக மார்க்கம் கூறும். எனவே இந்த பத்மபீடம் சஹஸ்ரதள சக்ரத்தையும் அதனுள் அனுபவிக்கும் ஆனந்த மயமான கூத்தாகிய இறை தத்துவத்தையும் உருவகம் செய்து காட்டுகிறது. இப்பீடமே பஞ்சபூதங்களில் ப்ருத்வி எனப்படும் பூமியையும் குறிக்கும்.

* **<u>உடுக்கை:</u>**

ஈசனின் கையில் உள்ள உடுக்கை ப்ரபஞ்சத்தின் படைப்புத்தொழிலை - creation, sound energy [ஒலி சக்தி] உணர்த்தும். இவ்வுடுக்கையின் ஒலியில் பிறந்தது ஓம் கார நாதம். அதனை அடிப்படையாகக் கொண்டே சங்கீதத்தின் ஏழு ஸ்வரங்களும், மொழிகளின் உயிர், மெய் எழுத்துக்களும் தோன்றின என்பது சாஸ்த்ரம்.மேலும் ப்ரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு பொருளின் அசைவும் இயக்கமும் தன்னுள் ஒரு முறையான rythm கொண்டு இருப்பதையும் உடுக்கை உணர்த்தும்.


Chidambaram Temple

* **அக்னி:**
ஈசனின் கையில் உள்ள தீ ப்ரபஞ்சத்தின் ஒளி சக்தியைக் குறிக்கும்.பஞ்சபூதங்களில் அக்னி தத்துவத்தையும் அதன் மூலம் நாம் transform ஆகும் தன்மையையும் அது உணர்த்தும். மாயத்துள் உழல்கின்ற ஆன்மாக்களுக்கு உண்மைகாட்டி, ”நீ வெறும் இவ்வுடல் அல்ல, அதை விட மேலான பரம்பொருள்” என்று உணர்த்தும் சக்தியாக தீ உள்ளது.

சில மூர்த்திகளின் கரங்கள் தீயை ஓற் அகலில் வைத்து ஏந்துவதாகக் காட்டுவர். அகல் மண்ணால் ஆனது. மண்ணால் ஆன இவ்வுடலுக்குள் அக்னியான ஞான தத்வம் விளங்குவதையும் இது குறிக்கும்.

நமது அறியாமையை எரித்து நீறாக்கி விடுவது ஞானமாகிய அக்னி. அதையே இறைவன் ஏந்துகின்றான்.

* **அபயக்கரம்:**
உடல்-மனம்-அறிவு-விழிப்புணர்வு-மெய்யுணர்வு ஆகிய ஐந்தாலும் ஒருங்கிணைந்த ஆன்மாவுக்கு இவ்வுலக வாழ்வில் எவ்வித பயமும் ஏற்படுவதில்லை என்பதை உணர்த்துவதே அபயக்கரம்.

* **முயலகன்:**
வெறும் கடமைகளைச் செய்தால் போதும். வாழ்க்கையில் தெய்வம், வழிபாடு என்பதெல்லாம் வெறும் கட்டுக்கதை என்று ஆணவத்தால் வாழ்ந்த தாருகாவன முனிவர்களுக்கு ஈசன் அறிவுரை கூறச் சென்ற போது, அவர்களால் யாகத்தில் இருந்து உருவாக்கப் பட்ட குறள் பூதமாகிய முயலகன் அனைத்து வ்யாதிகளையும் தருவான். அவன் மீது ஈசன் ஆடுகிறான். அவனை எழ விடாமல் முதுகின் மீது மிதித்து ஆடுகிறார்.

நம்முள் உள்ள அறியாமையால் உருவான ஆணவத்தின் முழுவொத்த வடிவம் தான் முயலகன். ஆணவம் வாழ்வில் அனைத்து விதமான துன்பங்கள் என்னும் வ்யாதிகளை வரவழைத்து விடும். அதை எழ விடாது சதா ஆன்மீகப் பயிற்சிகள் மூலம் ஞானமயமாய் வாழ்வதையே அவனது நிலை உணர்த்தும்.



***வ்யாதி என்பது மாறுபடுதல் என்ற பொருளிலும் கொள்ளப்படலாம். ப்ரபஞ்ச-வாழ்க்கை நியதியில் இருந்து ஆணவத்தின் உந்துததால் மனிதன் மாறிச்செல்லும் போது ஏற்படும் நிலையே துன்பம் ஆகும்.***

அவன் சற்று தலையை உயர்த்தி இருப்பான். ஆன்மாக்கள் பூரண ஞானத்தால் முக்திக்குச் செல்லும் போதும் மிக மிக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். ஏனெனில் அவ்விடத்தில் அணு அளவேனும் ஆணவம் தலைதூக்கி முக்தியை சிதைத்துவிடும் என்ற மிக நுட்பமான ஆன்மீக உண்மையை சிற்ப சாஸ்த்ரம் விளக்கும்.

முயலகன் அருகில் உள்ள பாம்பும் அவன் கையில் உள்ள வாளும் ஆணவத்தின் தீவீரத்தையே உணர்த்துகின்றன.

* **அக்னி ஜ்வாலைகளுடன் கூடிய ப்ரபாவளி - திருவாசி:**

இது ஓம் காரத்தின் வடிவம். ப்ரபஞ்சத்தின் வடிவம். ஆகாச தத்துவத்தின் குறியீடும் ஆகும்.ஓம் கார நாத பிந்துவில் இருந்து தோன்றிய விஞ்ஞான-மெய்ஞான வேதத்தின் மையப்பொருள் பரப்ரஹ்ம தத்துவத்தை விளக்கும். அந்த ஓம்கார நாதத்தின் மையமாக உள்ளது ஆடும் ஈச தத்வமே என்று சைவம் உணர்த்துகிறது.

29 அக்னி ஜ்வாலைகள் சீரான இடைவெளியில் அமைக்கப்படும்.அவை ஒளி-ஒலி சக்திகளின் கூட்டு இயக்கத்தைக் காட்டுவன.

ப்ரபஞ்சமே ஆதியந்தம் இல்லா அருட்பெருஞ்சோதியாகி வெளிச்சமாகி இருப்பதை உணர்த்துகிறது திருவாசி. இத்தத்துவத்தையே அதிகம் பேசினார் ராமலிங்க வள்ளல் பெருமான். இதை இன்றைய metaphysics அறிஞர்கள் தெளிவாக உணர்ந்ததாகக் கூறியும் உள்ளனர்.

* **முயலகன் மீது ஊன்றிய திருவடி:**

வலது கால் சிவ தத்வத்தைக் குறிக்கும். பூரண ஞானத்தால் தான் ஈஸ்வர கருணையுடன் ஆன்மா ஆணவத்தை அடக்கியாள முடியும் என்று உணர்த்தப்படுகின்றது.

* **தூக்கிய இடது திருவடி:**



இதையே "குஞ்சிதபாதம்" என்பர். இது இடது பாகமான ஜீவனின் சக்தி ப்ரஹ்மத்தை நோக்கி ஐக்யப்படச் செல்வதை உணர்த்துகின்றது. சக்தி பாகம் உயர்ந்து சிவமாகும் தன்மையை இது உணர்த்தும். அதாவது நம் ஜீவன் தன்னை உணர்ந்து ப்ரஹ்மாகும் தன்மையே இது!

* **தூக்கிய பாதத்தைச் சுட்டும் இடது கை:**
ஆன்மாக்களுக்குப் பிறவி சுழற்சியில் இருந்து மீள தன் திருவடிகளில் மீதான நம்பிக்கை, தூய அன்பு, சுயநலமற்ற சேவை ஆகியன தான் வழிகள் என்று உணர்த்தும் இக்கை.

* **நெற்றிக்கண்:**
ஞானத்தின் உருவகம் இக்கண் ஆகும்.ஞான ஒளியால் உண்மையை உண்மையானதாகக் காணும் அகக்கண் இதுவாகும். உலகில் உள்ள அனைத்தின் தோற்றங்களுக்கும் இயக்கங்களுக்கும் பின்னால் உள்ள மூல காரணப்பொருளைக் கண்டு அதன் மயமாய் உணரும் ஆனந்தக் காட்சியை அருள்வதே இக்கண் ஆகும்.

* **சிரித்த இதழ்கள்:**
எப்படிப்பட்ட கீழ்த்தரமான படைப்பினையும் மிக்க அன்புடன் ஏற்றுக் கொள்ளும் பூரண acceptance தன்மையை இதழ்கள் உணர்த்தும். பூரண ஞானம் பெற்ற அன்பர்கள் வாழ்க்கையை எப்படியும் எந்நிலையிலும் balanced ஆக ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் கொண்டவர்கள் என்பதை சிரிப்பு உணர்த்தும். மேலும் உலகில் தோன்றிய எவ்வுயிரும் பரிணமித்து முடிவும் தன்னை யார் என்று உணரும் நிலைக்கு வர முடியும் என்ற கருத்தை சிரித்த முகம் உணர்த்தும்.

* **சடை:**
விரிந்த சடைகள் - திசைகள், பஞ்சபூத தத்துவங்கள், ஆன்மீகத்தில் பலநெறிப்படும் மனதின் தன்மை.

பின்னி சீராக அமைக்கப்பட்ட சடைக்கொண்டை - அலைபாயும் மனதின் எண்ண‘க்களை ஒருங்கே இணைத்து சீரமைத்த பக்குவம்.

பின்பக்கம் வழிந்த ஐந்து சடைகள் - பஞ்சபூதங்களின் தனித்த இயக்கம்.



* **பிறை நிலா:**
மனதின் உருவகம். தேய்ந்து வளரும் நிலா போல், சதா ஏதாவது ஒன்றை எண்ணி இருக்கும் மனம். இதை ஞானமாகிய சடைக்கற்றையுடன் வைத்துக்கட்டி விட்டால் அது அலைபாயாமல் அமைதியுடனும் ஆக்கப்பூர்வமான செயலுடன் இருக்கும்.

ஆணவத்தால் துன்பப்படும் மனம் ஞானத்துடன் சேர்ந்து விட்டால் பின் இன்பம் ஒன்றே வாழ்க்கையாகிவிடும் என்ற கருத்தை நிலா உணர்த்தும்.

* **கங்கை:**
ஞானச் சடையில் கட்டப்பட்ட புனித கங்கை, சதா ஆன்மீக வாழ்வில் சாதனைகள் செய்து மூலப்பொருளை உணர்ந்து சேவைகள் பல செய்து ஆனந்தப்பெருவாழ்வு வாழும் அன்பர் தம் அடையாளம் ஆகும். சதா நம்முள் ஞானமாகிய புனித நீர் கொண்டு இறை தத்துவத்தை ஆணவமலம் சேராமல் கழுவிக்கொண்டே இருக்க வேண்டும் என்பதையே கங்கையும் காட்டுகிறது. தன்னால் தன்னைச் சேர்ந்த எவரையும் புனிதம் ஆக்கும் கங்கை தூய சுயநலம் அல்லாத தொண்டின் அடையாளம். அதனால் தான் இறைவனின் உச்சியை அவள் அலங்கரிக்கிறாள். திருத்தொண்டின் மூலமே ஆனந்தமயமான இறையாண்மையை நாம் நம்முள் களிக்க முடியும்.

* **ஸ்படிகலிங்கம்:**
மனித உடல் பெற்று, ஆன்மீகப்பயிற்சி மூலம் உணர்ந்த ப்ரஹ்மத்தை ஆணவ மலம் சேராது காக்க, சதா ஞானத்தாலும் சேவையாலும் கழுவிக்கொண்டே இருக்க வேண்டும் என்பதையே சிவகங்கைத் தீர்த்தம் மூலம் மேற்கொள்ளப்படும் ஆறு கால ஸ்படிகலிங்க அபிஷேக ஆராதனை உணர்த்துகின்றது. மனித உடலுக்குள் மெய்யுணர்வில் தூய ஞானமாய் ஸ்படிகம் போல இறை விளங்குவதையே ஸ்படிக லிங்கம், அது இருக்கும் வெள்ளிப்பேழை உணர்த்தும். அன்னாபிஷேனம் அதற்கு மிகவும் முக்கியம். அன்னம் என்பது பிறவிகளை உணர்த்தும்.

* **மாணிக்கக்கூத்தர்:**
தூய மாணிக்கக்கல்லால் செதுக்கிய அழகிய சிறிய நடராஜருக்குக் குறிப்பாக இரவு வேளைப் பூஜையின் போது பின்பக்கமாகக் காட்டப்படும் கற்பூர ஆரத்தியின் போது ஒளியின் தன்மையால் முழு பிம்பமும் செம்பவளச் சிவப்பாய் முன்னும் பின்னும்

உள்ள ஆடும் உருவாய்த் தோன்றும்.

சிவப்பு விழிப்புணர்வின் வண்ணம். எது விழிப்புணர்வு?
முன்னும் பின்னும், மேலும் கீழும் நடுவும், ஆதியும் அந்தமும், முதல் இடை கடைசி என எதிலும் இருப்பது ஒரே ப்ரஹ்மம் என்பதையே மாணிக்கக்கூத்தரின் தரிசனம் உணர்த்தும்.

* **<u>ப்ரம்மகபாலம், காட்டுப்பன்றிக் கொம்பு:</u>**
ஸ்வேத வராஹ கப்லத்தையும், ப்ரம்ம கல்பத்தையும் இது குறிக்கும். பரம்பொருள் 21 ப்ரம்மகற்பகாலம் தாண்டியும் தான் தானாகவே உள்ளது என்ற நிலைத்த தன்மையை உணர்த்தும் இவை.

* **<u>சடையில் உள்ள பூக்கள், விண்மீன்,</u>** ஆகியன இறைவன் அனைத்துமாக உள்ள தன்மையை உணர்த்தும்.மிக உயர்ந்த கொன்றையும் சுடுகாட்டில் வளரும் எருக்கும் ஈசனின் தலையில் ஒரே நிலையில் உள்ளன. அன்பர்களுக்குள் சாதி-நாடு-பால்-மொழி-இனம்-தொழில்-பணம்-பதவி-கல்வி இவற்றால் எவ்வித வேறுபாடும் இறைவனிடத்தில் இல்லை, அவனுக்கு அனைத்தும் ஒன்றே என்ற தன்மையை இப்பூக்கள் உணர்த்தும்.யாராக இருப்பினும் ஆனந்த நிலையைத் தன்னுள் உணர முடியும் என்ற வேத உண்மையை உணர்த்துவன பூக்கள்.

* **<u>வெண்ணீற்று மேனி:</u>**
ஆணவம் ஞானத்தீயால் சாம்பல் ஆகி இருக்கும் நிலையே வெண்ணீறு. இதுவே இறைவனின் தன்மை. ஆணவம் இல்லாத பூரண ஞானமே இறைவனின் திருவடிவம்.

* **<u>பூணூல்:</u>**
மூலாதாரத்தில் இருந்து உச்சியில் உள்ள சஹஸ்ரதளம் வரை குண்டலினி சக்தியை உயர்த்தி யோக மார்கத்தில் புருவமத்தியில்; இடகலை பிங்கலை நாடிகளுக்கு நடுவில், ஞானமாகிய நீல வண்ணமும் விழிப்புணர்வாகிய சிவப்பு வண்ணமும் ஒன்றரக்கலந்து மிளிர்வதையே யோகத்தில் "ஆனந்தக்கூத்து" என்று கொள்வர். அதையே இது உணர்த்தும்.

* **<u>வீசியாடும் கை:</u>**
சக்திக்கு சிவத்தைக் காட்டிக் கொடுக்கும் ஞானத்தை இக்கை உணர்த்தும். இதுவே காற்று தத்துவத்தையும் உணர்த்தும்.

**⁎ <u>தோடும் குழையும்</u>:**

இடது காதில் தோடு சக்தியாகிய பெண் தத்வத்தையும், வலது காதின் குழை ப்ரஹ்மமாகிய ஆண் தத்வத்தையும் உணர்த்தும்.

**⁎ <u>சிவ ஆகம சுந்தரி</u>:**

மேற்கூறிய நடராஜ தத்துவத்தை உரிய குரு மூலம் உணர்ந்து, ஆன்மீக வாழ்க்கை மேற்கொண்டு தன்னை யார் என உணர்ந்து ப்ரஹ்மத்துடன் கலக்கும் நம் ஜீவனே பார்வதியாகிய சக்தி. இன்ன முறையில் இப்படி எல்லாம் ஆன்மீகப் பயிற்சிகள் செய்தால் இன்ன முறையில் ப்ரஹ்மத்தை அறியலாம், இணையலாம் என்ற ஆகமத்தை-grammar நாம் உணர்ந்து வாழ்ந்து அதையே பிறருக்கும் கூறும் தன்மையின் நம் ஜீவன், "சிவ ஆகம சுந்தரி" ஆகிறது. சிவத்தை அடையும் வழியைக் கூறும் இலக்கணம் சொல்லும் சக்தியாக அன்னையை உருவகம் செய்கிறார்கள்.

**⁎ <u>மாணிக்கவாகசர்</u>:**

மேற்கூறிய ஆகமத்தை மக்களுக்கு உணர்த்தித் தானும் உணர்ந்து தானும் ஆடும் ஈசனும் வேறு அல்ல என்பதை உணர்த்திய ஜீவனின் உருவகம் தான் மாணிக்கவாசக ஸ்வாமிகள்.

**⁎ <u>காரைக்கால் அம்மை</u>:**

மிக்தி பெற்றாலும் மீண்டும் பிறந்தாலும் தூய பக்தியால் பொதுத்தொண்டில் வாழ்ந்து ஈசனை உணர்வதே உன்னதப்பேறு என்ற ஜீவனின் அடையாளத்தை உணர்த்தும் தூய பக்தியின் உருவகம் தான் இவர்.

மேற்கூறிய இருவரும் குருவின் வடிவாகவும் குறிக்கப்படுவர்.

***இத்தனை நேரம் நாம் தரிசித்த ஆனந்த நடராஜர் எங்கு இருக்கிறார்?***
***கோயிலிலா?***
***கோயிலில் இருக்கும் மூர்த்தி அனைத்துள்ளும் நீக்கமர நிறைந்த சிவபொருளாக இருக்கிறார். சற்று அகக்கண்ணால் உணர்ந்தால், இத்தனை நேரம் நடராஜர் என்ற வடிவத்தை விளக்கினோம். அவ்விளக்கம் ஈசனின் விளக்கமா? அல்லது நமது ஜீவனின் விளக்கமா?***

***யோசியுங்கள்!***

***Photos***

- *Natarajar shrine in Thiruvengadu [Aadhichidhambaram]*
- *Natarajar in Dr.Madeswaran's house.*

*The above article is based on Indian iconography and Shiva sidhandham. Readers can have their own explorations further for more detailed decodings.*